சுருக்கம்

பணியமைப்பு – வேளாண்மைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பி) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு R.வினோத்குமார் என்பவரின் பணியினை 26.08.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>வேளாண்மை (வேநி9) துறை</u>

அரசாணை (3டி) எண் 4

நாள்: 06.01.2021
சார்வரி வருடம்,
மார்கழி திங்கள் 22,
திருவள்ளுவர் ஆண்டு 2051

<u>படிக்கப்பட்டது:</u>

1. அரசாணை (நிலை) எண் 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி2 / 2881 / 2020, நாள் 21.11.2020.

*****

<u>ஆணை:</u>

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் கட்டுப்பாட்டில், திருப்பூர், தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் தோட்டக்கலை துணை அலுவலராகப் பணிபுரிந்து வந்தபோது 20.05.2011 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த (லேட்) திரு டி. இராஜேந்திரன் என்பவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது மகன் திரு R.வினோத்குமார் என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 67451 / 2018, நாள் 25.07.2019–ன்படி கருணை அடிப்படையில் கிடங்கு மேலாளராகப் (தரம்–3) பணி நியமனம் செய்து ஈரோடு, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, ஈரோடு, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2 / 7283 / 2019, நாள் 16.08.2019–ன்படி தனியர், தாளவாடி, வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில், தாளவாடி, துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடங்கு மேலாளராக (தரம்–3) 26.08.2019 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அரசாணை (நிலை) எண் 226, வேளாண்மை (வேநி4(1))த் துறை, நாள் 27.09.2019–ன்படி, கிடங்கு மேலாளர் (தரம்–3) பதவியின் பெயரை இளநிலை உதவியாளர் (பிணையம்) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 26.08.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. இந்நிலையில், வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பி) பணி நியமனம் செய்யப்பட்ட திரு R.வினோத்குமார் என்பவரின் பணியினை 26.08.2019 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலும், இளநிலை உதவியாளராகப் (பி) பணி நியமனம் செய்யப்பட்ட திரு R.வினோத்குமார் என்பவரின் பணி 26.08.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், தனியர் இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த ஆண்டு ஊதிய உயர்வுக்குத் தகுதியுடையவராகிறார்.

4. இந்த அரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ. சா. எண் 21196 / க்யூ.1 / 2020–1, நாள் 24.12.2020 மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் அ. சா. எண் 35410 / ஜி1 / 2020–1, நாள் 26.12.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5(இ).
திரு R.வினோத்குமார், இளநிலை உதவியாளர் (பிணையம்),
வழி: வேளாண்மை இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை–5.
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
கணக்காய்வுத் தலைவர் (துணிக்கை–1), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை–9.

நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத்துறை, சென்னை–9.
தொடர்புடைய கோப்பு எண் 22538 / வேநி9 / 2020
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

வ. சக்திமான் 13/1/2021
பிரிவு அலுவலர்